பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி
சென்னை – 4

08-08-2025 6.30
வெள்ளிக்கிழமை மாலை

## மாநிலச் செய்திகள்

### தலைப்புச் செய்திகள்

1. மரக்காணம் – புதுச்சேரி இடையே நான்கு வழிச்சாலை அமைக்கும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2. மாநில கல்விக் கொள்கை என்ற பெயரில் திமுக அரசு, தமிழக மக்களை இருட்டடிப்பு செய்துள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

3. தமிழகத்தில் சுகாதாரத் துறை சிறப்பாக செயல்படுவதாக சட்டப்பேரவைத் தலைவர் திரு அப்பாவு கூறியுள்ளார்.

4. தூய்மைப்பணியாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற திமுக அரசு முன்வரவேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

5. இலங்கை சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Aadhira Rajkumar பட்டம் வென்றார்.

-- இனி விரிவான செய்திகள் -

மரக்காணம்-புதுச்சேரி இடையே நான்கு வழிச்சாலை அமைக்கும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

*இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், 2 ஆயிரத்து 157 கோடி ரூபாய் செலவில், இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக கூறினார்.*

*இலவச சமையல் எரிவாயு இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் மானியம் வழங்கும் நடைமுறையை 12 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் நடப்பு நிதியாண்டிற்கும் நீட்டிக்கவும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.*

*சமையல் எரிவாயு சிலிண்டர்களை குறைந்த விலையில் விற்பதற்காக ஏற்படும் இழப்பீட்டினை ஈடுசெய்வதற்காக பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களுக்கு 30 ஆயிரம் கோடி ரூபாய் வழங்குவதற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக அவர் கூறினார்.*

*தொழில்நுட்பக் கல்வியில் ஆராய்ச்சிப் பணிகளை ஊக்குவிப்பதற்காக 4 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்திற்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.*

>><><><><<

*மாநில கல்விக் கொள்கை என்ற பெயரில் திமுக அரசு தமிழக மக்களை இருட்டடிப்பு செய்துள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் குற்றம்சாட்டியுள்ளார்.*

*இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஏற்கனவே நடைமுறையில் இருப்பதையே புதிய கொள்கையாக திமுக அரசு வெளியிட்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.*

83 பக்கங்களில் வெளியாகி இருக்கும் இந்த கல்விக் கொள்கையை யாரும் புரிந்து கொண்டு கேள்வி எழுப்பி விடக்கூடாது என்பதற்காக புரியாத தமிழில் எழுதியிருப்பதாக அவர் குறை கூறியுள்ளார்.

அரசுப் பள்ளிகளில் தமிழ் மற்றும் ஆங்கிலம் கற்பிக்கும் இருமொழிக்கொள்கையே செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பு இதில் இடம்பெற்றிருப்பதை சுட்டிக்காட்டிய அவர் இதன் மூலம் தனியார் பள்ளிகளில் தேசிய கல்விக்கொள்கைப்படி 3 ஆவது மொழி இருப்பதை திமுக அரசு ஏற்றுக்கொள்கிறதா என்று வினவியுள்ளார்.

இதுதொடர்பாக 11 கேள்விகளையும் அமைச்சர் எழுப்பியுள்ளார்.

பள்ளிக் கல்வியை மேம்படுத்த மத்திய அரசு வழங்கி வரும் நிதியை பெற்றுக்கொண்டு அதை மடைமாற்றும் வகையில் திமுக அரசு செயல்படுவதாக அவர் கூறியுள்ளார்.

திமுக அரசின் இந்த நாடகத்தை தமிழக மக்கள் ஒருபோதும் நம்ப மாட்டார்கள் என்றும் டாக்டர் எல் முருகன் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

>><><><<

உயர்கல்வித் துறையில் தமிழகம் சிறந்து விளங்குவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு கோவி செழியன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கல்வித்துறையின் வளர்ச்சிக்காக தமிழக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் கூறினார்.

இதன் காரணமாக மாணவர் சேர்க்கை அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

***பெற்றோர் – ஆசிரியர் – மாணவர் இடையேயான உறவை வலுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளதாகவும் திரு கோவி செழியன் கூறினார்.***

*>><><><<*

***தமிழகத்தில் சுகாதாரத் துறை சிறப்பாக செயல்படுவதாக சட்டப்பேரவைத் தலைவர் திரு அப்பாவு கூறியுள்ளார்.***

***நெல்லை அரசு மருத்துவக் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் இன்று கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.***

***ஐநா சபை பாராட்டும் வகையில் தமிழக அரசின் சுகாதாரத் திட்டங்கள் திகழ்வதாக அவர் தெரிவித்தார்.***

***(சவுண்ட் பைட் – அப்பாவு – 27 செகண்ட்ஸ்)***

*>><><><<*

***தூய்மைப்பணியாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற திமுக அரசு முன்வரவேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.***

***இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தூய்மைப்பணியாளர்கள் போராட்டம் நடத்தி வருவதை சுட்டிக்காட்டியுள்ளது.***

***தூய்மைப்பணியாளர்களின் கோரிக்கை தொடர்பாக, தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்ற வேண்டும் என்றும் பிஜேபி அந்த அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளது.***

*>><><><<*

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக தேமுதிக பொதுச் செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் குற்றம்சாட்டியுள்ளார்.

இன்று ஒசூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், போதைப் பொருள் பயன்பாடு காரணமாக குற்றச் செயல் அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டார்.

ஆணவக் கொலைகளை தடுக்க சட்டம் இயற்றப்பட வேண்டும் என்றும் திருமதி பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தினார்.

>><><><<

வாக்காளர் பட்டியல் திருத்தும் பணிகள் குறித்து எதிர்க்கட்சிகள் தெரிவிக்கும் கருத்துக்கள் கண்டிக்கத்தக்கது என்று உள்துறை அமைச்சர் திரு அமித் □ா கூறியுள்ளார்.

பீகார் மாநிலத்தில் இன்று பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர், ஊடுருவல்காரர்களுக்கு வாக்காளர் பட்டியலில் இடமில்லை எனறு தெரிவித்தார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி, வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் குறித்து அரசியல் செய்வதாக அவர் குற்றம்சாட்டினார்.

ஆபரே□ன் சிந்தூர் தொடர்பான எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடு கண்டிக்கத்தக்கது என்றும் திரு அமித் □ா தெரிவித்தார்.

>><><><<

நாடுமுழுவதும் இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கம் நாடு முழுவதும் நடைபெற்று வருகிறது.

இதனையொட்டி மதுரை ரயில் நிலையத்தில் தேசியக்கொடி குறித்த கண்காட்சி இன்று தொடங்கியது.

*தேசியக்கொடியின் மகத்துவம் மற்றும் முக்கியத்துவத்தை போற்றும் வகையில் இந்த கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் – ரகுராஜா – 39 செகண்ட்ஸ்)*

*>><><><<*

*தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*(சவுண்ட் பைட் – செந்தாமரைக்கண்ணன் – 52 செகண்ட்ஸ்)*

*>><><><<*

*மாவட்டச் செய்திகள்*

*அரியலூர் மாவட்டத்தில் கிராமங்களை இணைக்கும் வகையிலான சாலைப் பணிகளை மாநில அமைச்சர் திரு சிவசங்கர் இன்று தொடங்கி வைத்தார்.*

*-----------------*

*காஞ்சிபுரம் மாவட்டத்தில் நெசவாளர்களுக்கான சிறப்பு மருத்துவ முகாமினை மாநில அமைச்சர் திரு காந்தி இன்று தொடங்கி வைத்தார்.*

*-----------------*

*கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களின் விவரங்களை சேகரிக்கும் பணியினை ஆட்சியர் திருமதி அழகுமீனா இன்று ஆய்வு செய்தார்.*

*-----------------*

தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரியாற்றில் நீர்வரத்து 17 ஆயிரம் கனஅடியாக குறைந்துள்ளது.

>><><><<

## விளையாட்டுச் செய்திகள்

இலங்கை சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் *Aadhira Rajkumar* பட்டம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 24-22, 23-21, என்ற செட் கணக்கில், இந்தியாவின் *Lakshya Rajesh*-ஐ வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் *Dhyan Santosh*-யும் கலப்பு இரட்டையர் பிரிவில் *Anjana – Nirajan* இணையும், 15 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவில் *Hamsini Chadaram* -ம் பட்டம் வென்றனர்.

---------------

அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச பாரா டேபிள் டென்னிஸ் போட்டியில் *Bhavinaben Patel* வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

-----------------

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீஜா அகுலா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

---------------

ஜெய்பூரில் நடைபெற்ற சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் *Tanvi Kanna* வெள்ளிப்பதக்கம் வென்றார்.

-----------------

சீனாவில் நடைபெற்றுவரும் உலக விளையாட்டுப்போட்டிகளின் வில்வித்தை பிரிவில் இந்தியாவின் அபி□ க் வர்மா, ரி□ ப் யாதவ், *Madhura Dhamangaonkar* மற்றும் *Parneet Kaur* காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

***-----------------***

***தாய்லாந்து சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Abhinav Thakur அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.***

***>> End of News <<***